DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 64/2025
Miscellaneous :
Sessions : PW 7
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | செந்தில் |
| Father / Husband Name | கோபால் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **10.02.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கீழாமூரில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். சாட்சி லோகநாதனை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 1.00 முதல் 2.00 மணிக்குள் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது கீழாமூர் கன்னிக்கோவில் அருகே போலிசார் விபத்து சம்மந்தமாக விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதற்காக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** எந்தெந்த வாகனங்களுக்கு இடையே விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கீழாமூர் கன்னிக்கோவில் எனக்கு ஏற்கனவே பரிட்சயமான இடம் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் படம் வரைந்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள். அதில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி நான் கையொப்பம் செய்த தாள் கையால் எழுதப்பட்டிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னை மேற்படி இடத்தில் விசாரிக்கவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**